| | | |
|---|---|---|
| சாட்சி : PW2<br>நாகராஜ் | அ.வ.எண். 389/2022 | 09.09.2025 |

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) 1ம் வாதி உங்களுக்கு சம்மந்தி உறவுமுறை என்றால் இல்லை. உங்கள் அண்ணன் பெயர் என்ன என்றால் பனையடியான். பனையடியானின் மகளை தான் 1ம் பிரதிவாதியின் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. உங்கள் அண்ணனின் மகள் பெயர் என்ன என்றால் கீர்த்திகா. மேற்படி கீர்த்திகாவிற்கு திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். எந்த ஊரில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் கீர்த்திகா காதல் திருமணம் செய்து கொண்டதால் எந்த ஊர் என்று தெரியாது. உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து வாதிகளின் தகப்பனார் பாலசுப்ரமணியனுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில், எந்த வகையில் பாத்தியப்பட்டது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் 2022ம் வருடம் அக்டோபர் மாதம் வாதிகளிடம், பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ள நிலையில், நீங்கள் அது சம்மந்தமாக காவல் நிலையம் சென்றீர்களா என்றால் இல்லை. அந்த இடம் சம்மந்தமாக போலிஸார் வந்து விசாரரித்தார்கள் என்றால் சரிதான். 2022ம் ஆண்டுக்கு முன்பு வாதிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் எங்கு, எப்படி இருக்கிறது என்று உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான்.

3) உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் ஓட்டுவில்லை வீடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அது ஆஸ்பெட்டாஸ் வீடு என்றாலும், அதில் 1ம் பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நீங்கள் மேற்படி வீட்டில் 1ம் பிரதிவாதி குடியிருந்து வருவதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. தாவா 1 மற்றும் 3வது அயிட்ட சொத்துக்கள் இன்றுவரை 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 1ம் வாதி உங்களுக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.